Daily Thanthi Puducherry 10-9-2023

# ஜிப்மரில் கண்தான விழிப்புணர்வு நிகழ்ச்சி

புதுச்சேரி, செப்.10-

ஜிப்மர் கண் மருத்துவத்துறை சார்பில் 38-வது தேசிய இருவார கண்தான விழிப்புணர்வு கடைபிடிக்கப்பட்டது. இதையொட்டி ஜிப்மர் ஊழியர்கள் மற்றும் மாணவர்களிடையே கோலப்போட்டி உள்ளிட்ட பல்வேறு போட்டிகள் நடத்தப்பட்டன. மேலும் கண்தானம் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சியும் நடத்தப்பட்டது.நிகழ்ச்சியில் பத்மஸ்ரீ விருது பெற்ற டாக்டர் நளினி பார்த்தசாரதி, பேராசிரியர் ரேணுகா சீனுவாசன், மருத்துவ கண்காணிப்பாளர் துரைராஜன் ஆகியோர் கலந்துகொண்டு கண் தானம் வழங்கியவர்களின் குடும்பத்தினரை பாராட்டினார்கள். ஜிப்மர் கண் வங்கி தலைவர் பேராசிரியர் ரமேஷ் பாபு, இறப்புக்கு பின் கண்தானம் செய்வதை ஊக்குவித்து கண்தானம் செய்வதை குடும்ப பாரம்பரியமாக மாற்ற வேண்டி வலியுறுத்தினார். நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை கண் மருத்துவத்துறை தலைவர் டாக்டர் நிருபமா கஸ்தூரி செய்திருந்தார்.